# திருநெல்வேலி மாநகராட்சி

## 30.11.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

### மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்

**தீர்மானம் எண்: 178**

பாளையங்கோட்டை மனக்காவலம்பிள்ளை ரோட்டில் அமையப் பெற்றுள்ள மாநகராட்சி பல்நோக்கு மையத்திற்கு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் புகழ் போற்றிடும் வகையிலும், ஐந்து முறை தமிழக முதல்வராக ஆட்சி செய்த, தமிழ் இனத்தின் தலைவராக இருந்து அன்னை தமிழுக்காக பாளையங்கோட்டை சிறைச் சாலையில் தனிமை சிறையில் இருந்த போது அறிஞர் அண்ணா அவர்களால் என் தம்பி கருணாநிதி இருக்கும் சிறைச்சாலையே எனக்கு புனித யாத்திரை தலம் என போற்றிய கலைஞர் அவர்களின் நினைவை போற்றிடும் வகையிலும் பல்நோக்கு மையத்திற்கு "டாக்டர் கலைஞர் அரங்கம்" என பெயர் வைப்பதற்கு மாண்புமிகு மேயரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

### 28.10.2022 அன்று ஒத்திவைக்கப்பட்ட சாதாரண கூட்ட பொருள் எண்.10

10. திருநெல்வேலி மாநகராட்சியில் ஜீலை, ஆகஸ்ட் 2022 ஆகிய மாதங்களில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் தொடர்ச்சியாக கலந்து கொள்ளாத கீழ்காணும் மாமன்ற உறுப்பினர்களுக்கு "திருநெல்வேலி மாநராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 59(I)-ன் படி தொடர்ச்சியான மூன்று கூட்டங்கில் கலந்து கொள்ளாத மாமன்ற உறுப்பினரை தகுதி நீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது" என்ற விபரம் குறிப்பிட்டு அடுத்து நடக்கவிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள தெரிவித்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண் : சி5/1483/2022 நாள்: 15.09.2022 மூலம் தெரிவிக்கப்பட்டு பதிவு தபால் மூலம் சம்மந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டது.

| வ.எண் | மாமன்ற உறுப்பினர்கள் பெயர் |
|---|---|
| 1. | திருமதி. முத்துலெட்சுமி<br>2 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 2. | திரு. பூ. ஜெகநாதன்<br>30 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 3. | திருமதி. அமுதா<br>31 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |

அதனை பெற்றுக் கொண்ட மேற்கண்ட மாமன்ற உறுப்பினர்களில், வரிசை எண் 3-ல் காணும் மாமன்ற உறுப்பினர் திருமதி.அமுதா அவர்கள் 21.09.2022ல் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். மற்ற இரு மாமன்ற உறுப்பினர்களான திருமதி.முத்துலெட்சுமி, திரு.பூ. ஜெகநாதன், ஆகிய இருவரும் 21.09.2022 ம் தேதிய மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதன் மூலம் மேற்படி இரண்டு மாமன்ற உறுப்பினர்களும் 29.07.2022, 24.08.2022, 21.09.2022 ஆகிய தேதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு59(l)-ன் படி

**59. Disqualification of Councillors – (1)** Subject to the provisions of section 62, a Councillor or a person referred to in clause (b) or (c) of subsection (2) of section 5 shall cease to hold office as such if he

.
.
.

**(l)** fails to attend the meetings of the council for a period of three consecutive months beginning from the date of the commencement of his term of office or of the last meeting he attended, or of his restoration to office as Councillor under sub section (4), as the case may be:

(4) In the case of a person who has ceased to be a Councillor in consequence of failure to attend meetings the matter shall be reported by the Commissioner to the Council at its next ordinary meeting and the Council may at that meeting restore such person to office.

| **வ.எண்** | **மாமன்ற உறுப்பினர்கள் பெயர்** |
|---|---|
| 1. | திருமதி. முத்துலெட்சுமி<br>2வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 2. | திரு. பூ. ஜெகநாதன்<br>30 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |

மேற்கண்ட மாநகராட்சி சட்டப்பரிவுகளின்படி மேற்குறிப்பிட்ட இரண்டு மாமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்ற விவரம் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களான திருமதி.முத்துலெட்சுமி (வார்டு எண்.2) திரு.பூ.ஜெகநாதன்(வார்டு எண்.30), ஆகியோர் 29.07.2022, 24.08.2022, 21.09.2022 ஆகிய தேதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளாமையால், திருநெல்வேலி மாநகராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 59(l) ன் படி தகுதிநீக்கம் ஆகின்றனர். மேற்காணும் சட்டப்பிரிவு 59(4)ன் படி மேற்குறிப்பிட்ட இரு

மாமன்ற உறுப்பினர்களையும் மீளவும் மாமன்ற உறுப்பினர்களாக செயல்பட (Restore) அனுமதிப்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்: சி5/1483/2022**

**தீர்மானம் எண் : 179 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். 23981/2022 மற்றும் 24078/2022 இல் வழங்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் இதே பொருள் தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். 360/2022 மற்றும் 376/2022 மீதான வீசாரணயை 31.03.2022 க்குள் விசாரணைச் செய்து முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்ததையடுத்து வழக்கின் மீது வரும் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இப்பொருள் மீதான மேல்நடவடிக்கை தொடரப்படும் என தீர்மானிக்கப்படுகிறது.**

---

## புதிய பொருட்கள்

1. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 9-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கே.சுப்புலெட்சுமி அவர்கள் தனது வார்டு பகுதிகளான தயாபரன் தெருவில் 2 தெருவிளக்குகள், அறிவட்ட நாயனார் தெருவில் 2 தெருவிளக்குகள், கனகநாதநாயனார் தெருவில் 4 தெருவிளக்குகள், முப்பிடாதியம்மன்கோவில் தெருவில் 5 தெருவிளக்குகள், திருநீலநாயனார் தெருவில் 1 தெருவிளக்குகள் மற்றம் பத்திரகாளியம்மன் கோவில் தெருவில் 2 தெருவிளக்கு ஆக மொத்தம் 16 தெருவிளக்குகள் அமைத்து அதில் 20W LED விளக்குள் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/- (ரூபாய். இரண்டு லட்சம் மட்டும்)-க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி தெருக்களில் 20 மின்லைன் அமைத்து தெரு விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 9-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கே.சுப்புலெட்சுமி அவர்களின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் நலன் கருதியும் மாமன்ற உறுப்பினர் கேரியுள்ள தெருக்களில் 16 தெருவிளக்குகள் லைன் அமைத்து 20W LED 16 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.2,00,000/- (ரூபாய். இரண்டு லட்சத்திற்கு மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/2170/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 180 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

2. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.மேரிகுமார் அவர்கள் தனது வார்டு பகுதியான பரதவர் தெரு இரண்டு தெருவிளக்கு, செழுஞ்சுடர் தெருவில் நான்கு தெருவிளக்கு, ஓளவையார் தெருவில் ஐந்து தெருவிளக்கு, அணி நகரில் ஆறு தெருவிளக்கு மற்றும் ஆசாரி தெருவில் 3 தெருவிளக்கு ஆக மொத்தம் 20 தெருவிளக்குகள் லைன் அமைத்து அதில் 20W LED விளக்குள் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,50,000/- (ரூபாய். இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மட்டும்)-க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி தெருக்களில் இருபது மின் விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 8வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.மேரிகுமார் அவர்களின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் நலன் கருதியும் பரதவர் தெரு 2 தெருவிளக்கு, செழுஞ்சுடர் தெருவில் 4 தெருவிளக்கு, ஓளவையார் தெருவில் 5 தெருவிளக்கு, அணி நகரில் 6 தெருவிளக்கு மற்றும் ஆசாரி தெருவில் 3 தெருவிளக்கு ஆக மொத்தம் 20 தெருவிளக்குகள் லைன் அமைத்து 20W LED 20 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.2,50,000/- (ரூபாய். இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்திற்கு மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/3304/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 181 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

3. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 36-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.சின்னத்தாய் கிருஷ்ணன் அவர்கள் தனது வார்டு பகுதியான ஸ்போர்ட்ஸ்வியு கார்டன், அண்ணா நகர் ஆட்டோ ஸ்டேன்ட், எ.டி.ஜே.நகர், லூாக் நகர், செயின் மார்க் சாலை, காந்தி நகர் 8வது தெரு மற்றும் ரோஸ் அவென்யு ஆகிய தெருக்களில் தெருவிளக்கு இல்லாமல் மின்கம்பங்கள் உள்ளதாகவும், எனவே பொது மக்களின் நலன் கருதி 9 தெருவிளக்குகள் லைன் அமைத்து அதில் 20W LED விளக்குள் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/- (ரூபாய். ஒரு லட்சம் மட்டும்)-க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி தெருக்களில் 9 மின் விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண்: 36-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.சின்னத்தாய் அவர்களின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் நலன் கருதியும் மாமன்ற உறுப்பினர் கோரியுள்ள தெருக்களில் 9 தெருவிளக்குகள் லைன் அமைத்து 20W LED 9 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.1,00,000/- (ரூபாய். ஒரு லட்சத்திற்கு மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/3304/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 182 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 7-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.எம்.இந்திராமணி அவர்கள் தனது வார்டு பகுதிகளான திருவள்ளுவர் தெருவில் 6 தெருவிளக்குகள், திருமலை தெருவில் 4 தெருவிளக்குகள், வடக்குகென்னடி தெருவில் 2 தெருவிளக்குகள், காமராஜ் நகர் 2 தெருவிளக்குகள், ஜானகி தெருவில் 6 தெருவிளக்குகள் ஆக மொத்தம் 20 தெருவிளக்குகள் அமைத்து அதில் 20W LED விளக்குள் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,50,000/- (ரூபாய். இரண்டு லட்சத்து ஐம்பதாயிர மட்டும்)-க்கு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி தெருக்களில் 20 மின்லைன் அமைத்து தெரு விளக்கு அமைக்க மாமன்றம் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 7-வது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.இந்திராமணி அவர்களின் கோரிக்கையின்படியும், பொதுமக்களின் நலன் கருதியும் மாமன்ற உறுப்பினர் கோரியுள்ள தெருக்களில் 20 தெருவிளக்குகள் லைன் அமைத்து 20W LED 20 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.2,50,000/- (ரூபாய். இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/3230/2022 (பா.வார்டு)

**தீர்மானம் எண்: 183 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி, தச்சை மண்டலம், பழைய வார்டு எண் 06, புதிய வார்டு எண். 30, பெருமாள் வடக்கு ரத வீதி, கதவுஎண் 45 என்ற கட்டிடத்தின் பழைய சொத்துவரி வரிவிதிப்பு எண் : 146/006/01767 புதிய சொத்துவரி வரிவிதிப்பு எண். 146/030/902939 - கட்டிடத்தின் சொத்துவரி அரையாண்டு வரியாக ரூபாய் 713/- மற்றும் (SUC) ரூ 300/- ஆக இருந்து வருகிறது. வரிவிதிப்பீடு மேல்முறையீடு தீர்வாயம் திருநெல்வேலி மாநகராட்சி மேல்முறையீட்டு வழக்கு எண்.2/2021 நாள்:26.03.2022ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையில் மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி வரிவிதிப்பை ரத்துசெய்து உத்தர விடப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்புரையின் படி பழைய சொத்து வரிவிதிப்புஎண் : 146/006/01767 புதிய சொத்துவரி 146/030/902939- யினை 1.10.2021 முதல் ரத்து செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலககுறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சி தச்சை மண்டலம், பழைய வார்டு எண் 06, புதிய வார்டு எண். 30,பெருமாள் வடக்குரதவீதி, கதவுஎண் 45, என்ற கட்டிடத்தின் பழைய சொத்துவரி வரிவிதிப்பு எண் : 146/006/01767 புதிய சொத்துவரி வரிவிதிப்பு எண். 146/030/902939 - னை வரிவிதிப்பீடு மேல்முறையீடு தீர்வாயம் திருநெல்வேலி மாநகராட்சி மேல்முறையீட்டு எண் 2/2021 நாள் 26.03.2022 தீர்ப்புரையின் படி1.10.2021 முதல் ரத்து செய்ய மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

ந.க.எண்A3/729/2022

**தீர்மானம் எண்: 184 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

6. திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்காணும் உரிம இனங்களுக்கு அரசாணை எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.25.5.2009ன்படி 2022-2025-ஆம் காலத்திற்கான மூன்று ஆண்டு காலத்திற்கு மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு திருநெல்வேலி மாநகராட்சி மைய அலுவலகத்தில் வைத்து 27.10.2022 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு, மாநகராட்சியின் நான்கு மண்டல அலுவலகங்களில் உள்ள விளம்பர பலகைகளிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்கண்டவாறு ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.10.2022 அன்று நடைபெற்ற பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளில் கீழ்க்காணும் விபரப்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

**ஏல விபரம்:** ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

**ஒப்பந்தப்புள்ளி விபரம் (குறுமத் தொகை ரூ. 9,10,000/-)**

* ஒப்பந்தப்புள்ளியில் நான்கு பேர் மட்டும் கலந்து கொண்டனர்.

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை விபரம் ரூ | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.சங்கர்,<br>15ஏ, பட்டு பிள்ளையார் கோவில் தெரு,<br>பாளையங்கோட்டை | வைப்புத்தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321422 dated 01.10.2022 மற்றும் DD. No. 321458 dated 25.10.2022 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 321421 dated 01.10.2022 மற்றும் DD. No. 321460 dated 25.10.2022 | ரூ.1105401/- |
| 2 | திரு. சாலி மௌலானா<br>86, செல்வகாதர் தெரு,<br>மேலப்பாளையம் | வைப்புத்தொகை ரூ.200000/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி DD. No. 371009 dated 26.10.2022 மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.200000/- சிட்டி யூனியன் வங்கி DD. No. 371010 dated 26.10.2022 | ரூ.1221000/- |
| 3 | திரு. அபுதாகீர்,<br>71/24, பெரிய கொத்பா பள்ளிவாசல் தெரு,<br>மேலப்பாளையம் | DD இணைக்கப்படவில்லை | ரூ. 1218000/- |
| 4 | திரு.ஏ.மாரித்துரை,<br>10, அணைக்கரை அம்மன் கோவில் தெரு,<br>வடக்கு வீரவநல்லூர் | வைப்புத்தொகை ரூ.200000/- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி DD. No. 355230 dated 26.10.2022 மற்றும் சால்வன்சி மதிப்பு ரூ.15,00,000/-க்கு சமர்ப்பித்துள்ளார். Certificate No. TN-1720221011120 dated 14.10.2022 | ரூ. 16,02,101 |

மேற்காணும் உரிமம் தொடர்பாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் வரிசை எண் 4-ல் உள்ள திரு.ஏ.மாரித்துரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ரூ. 16,02,101/- (ரூபாய் பதினாறு லட்சத்து, இரண்டாயிரத்து நூற்றி ஒன்று மட்டும்) குறும தொகையை விட ரூ. 692101/- கூடுதலாக இருப்பதால் திரு.ஏ.மாரித்துரை என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 16,02,101/- ஐ ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு**

பொருளில் காணும் விபரப்படி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 27.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பிட்டு நோக்கியதில் திரு.ஏ.மாரித்துரை என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி ரூ. 16,02,101/- (ரூபாய் பதினாறு லட்சத்து, இரண்டாயிரத்து நூற்றி ஒன்று மட்டும்) குறும தொகையை விட ரூ. 692101/- கூடுதலாக இருப்பதால் திரு.ஏ.மாரித்துரை என்பவரின் உச்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 16,02,101/- ஐ ஏற்று, திரு.ஏ.மாரித்துரை என்பவருக்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை வழங்க மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண். A1/655/2022 (மே.பா)

**தீர்மானம் எண்: 185 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7. திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் வார்டு எண் 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மனுவின்படி, ராமர் கோவில் நான்கு முக்கு சந்திப்பு மற்றும் வி.எம். சத்திரம் அந்தோணி பப்ளிக் ஸ்கூல் மற்றும் ஜெயந்திரா ஸ்கூல் வரை மெயின் ரோட்டில் 43 மின் கம்பம் தெருவிளக்கு லைன் அமைத்து 20 W LED 43 எண்ணம் அமைத்திடவும், மேலும் தனுஷ்கோடி அதித்தனார் விரிவாக்க பகுதியில் 35 மின் கம்பங்களில் தெரு மின்லைன் அமைத்து 35 எண்ணம் 20 W LED அமைத்திடவும், ஆக மொத்தம் 78 மின் கம்பத்தில் தெருவிளக்கு லைன் அமைத்து 20 W LED 78 எண்ணம் அமைத்திட மின்வாரிய உத்தேச செலவு தொகை ரூ. 10,00,000/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ஆகும். எனவே மேற்கண்டவாறு மின்விளக்குகள் அமைக்கவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட பகுதிக்கு புதியதாக மின் விளக்குகள் அமைக்கவும்,மின்வாரிய செலவுத் தொகையும் சேர்த்து உத்தேச செலவுத் தொகை ரூ10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 186 பாளை மண்டலம் 38வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைபடி மாமன்ற உறுப்பினர் கோரியுள்ள தொருக்களில்78 எண்ணம் தெரு விளக்குகள் லைன் அமைத்து 20 W LED 78 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) க்கு மாமன்றம் அனுமதிக்கப்பட்டது.**

---

8. திருநெல்வேலி மாநகராட்சி பணிக்கு பணியமர்த்தப்படுவதற்கு முன்பு வருவாய் துறையில் கர்ணம்/VAO ஆக பணி புரிந்து பின்னர் இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளர்/வருவாய் உதவியாளராக பணியமர்த்தப்பட்டு வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள 5 பணியாளர்களுக்கு அவர்களின் கிராம கர்ணம் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள் முதல் திருநெல்வேலி மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் வரையுள்ள பணிமுறிவு காலத்தினை பொருட்படுத்தாது விட ஆணையாளர் அவர்கள் ஆணை வழங்கவும், பணிமுறிவு காலங்களை தவிர்த்து அன்னார்களின் மதிப்பூதியம் அடிப்படையில் பணியாற்றிய பணிக்காலத்தில் பாதி பணிக்காலத்தினை ஓய்வூதிய கணக்கில் எடுத்துக் கொண்டு ஓய்வூதிய பயன்கள் வழங்கலாம் என திருநெல்வேலி மாநகராட்சி அவசரக் கூட்டத்திர்மான எண்: 29 நாள்: 29.05.2014ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று திருநெல்வேலி மாநகராட்சி சாதாரண கூட்டத்திர்மான எண்: 28 நாள்: 07.07.2021ல் திரு.எஸ் முருகேசன் என்பவருக்கு அன்னார் கிராம கர்ணம் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள் முதல் திருநெல்வேலி மாநகராட்சி பணியில் சேர்ந்த நாள் வரை உள்ள பணி முறிவு காலத்தினை பொருட்படுத்தாது விட ஆணையாளர் ஆணை வழங்கவும், பணி முறிவு காலங்களை தவிர்த்து அன்னார் மதிப்பூதியம் அடிப்படையில் VAO ஆக பணியாற்றிய பணிக்காலத்தில் பகுதி பணிக்காலமாக 5 வருடம் 7 மாதம் 17 நாட்கள் தகுதியான பணிகாலத்துடன் சேர்த்து ஓய்வூதிய பயன்களுக்கு எடுத்துக் கொள்ள மாமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாமன்றத் தீர்மானத்துடன் திருத்திய ஓய்வூதிய கருத்துரு துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித்துறை அவர்களுக்கு அனுப்பபட்டதில் ' துணை இயக்குனர் தணிக்கைத் துறை அவர்களின் கடிதம் ஓ.மு. எண்: 389/அ1/2022 நாள்: 16.09.2022ல் கர்ணமாகப் பணியாற்றிய காலமானது முழு நேர பணிக்காலம் எனில் அது குறித்த ஆவணங்கள் வழங்கப்படும் நிலையில்

திருத்திய ஓய்வூதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்க இயலும் என தெரிவித்து ஓய்வூதிய கருத்துரு திருப்பப்பட்டுள்ளது.

எனவே திருநெல்வேலி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.06.2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு. எஸ். முருகேசன் என்பவருக்கு கீழ்கண்டுள்ளவாறு கலம் எண் 8- இல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதி பணிக்காலத்துடன் சேர்த்து திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கிட மாமன்ற அனுமதிக்கும் முடிவிற்கும்

| வரிசை எண் | பெயர் மற்றும் பதவி | பணிமுறிவு காலம் | திருநெல்வேலி மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாள்: | ஓய்வு பெற்ற நாள் | மதிப்பூதியத்தில் பணிபுரிந்த காலம் (வட்டாட்சியர் களிடமிருந்து பணிச்சான்று பெறப்பட்டுள்ளது | மொத்த பணிக்காலம் | ஓய்வூதிய பயன்களுக்கு எடுத்துக் கொள்ளும் பணிக்காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | திரு. எஸ் முருகேசன், வருவாய் உதவியாளர் (ஓய்வு) | 15.11.1980 முதல் 30.12.1988 மற்றும் 14.07.1989 முதல் 21.02.1990 | 22-02-1990 | 30-06-2008 | 1) கர்ணம் பணிக்காலம் 22-07-1970 முதல்14-11-1980 முடிய 10 வருடம் 8 மாதம் 21 நாட்கள் 2)கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பணிக்காலம் 31-12-1988 முதல்13-07-1989 முடிய 6 மாதம் 13 நாட்கள் | 11 வருடம் 3 மாதம் 4 நாட்கள் | 5 வருடம் 7 மாதம் 17 நாட்கள் |

**அலுவலக குறிப்பு:**

பொருளில் காணும் விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்தில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30-06-2008 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு. எஸ். முருகேசன் என்பவருக்கு மாமன்றத் தீர்மானம் எண்: 28 நாள்: 07.07.2021ல் அன்னார் 22.02.1970 முதல் 14.11.1980 முடிய கர்ணமாக

பணியாற்றிய காலம் பகுதி நேரப் பணி என குறிப்பிடப்பட்டுள்ளதை முழு நேர அரசு பணியாக திருத்தம் செய்து அன்னார் வருவாய் துறையில் கிராம கா்ணம் மற்றும் கிராம நிா்வாக அலுவலா் பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நாள் முதல் திருநெல்வேலி மாநகராட்சி பணியில் சோ்ந்த நாள் வரை உள்ள பணிமுறிவு காலத்தினை பொருட்படுத்தாது விட ஆணையா் அவா்கள் ஆணை வழங்கவும், பணிமுறிவு காலங்களை தவிர்த்து தனியா் வருவாய் துறையில் மதிப்பூதியத்தில் பணியாற்றிய பணிக்காலத்தில் பாதி பணிக்காலமான 5 வருடம் 7 மாதம் 17 நாட்கள் (கலம் எண் 8- இல் குறிப்பிட்டுள்ளவாறு) தகுதி பணிக்காலத்துடன் சோ்த்து திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கிட மாமன்ற அனுமதிக்கலாம்.
(கோப்பு சி1/2583/2008 மே.பா.ம)

**தீா்மானம் எண்: 187 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

9. திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலம் வாா்டு எண் 37க்குட்பட்ட குமரன் காலனியில் ஏற்கனவே மின்கம்பங்கள் உள்ளன. ஆனால் மேற்படி மின்கம்பங்களில் தெருவிளக்கு இல்லாததினால் பொது மக்களின் நலன் கருதி 3 தெருவிளக்குகள் லைன் அமைத்து அதில் 20W LED விளக்குகள் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள அதற்கான உத்தேச செலவினம் ரூ.40,000/- (ரூபாய். நாற்பதாயிரம் மட்டும்)-க்கு ஆணையாளா் அவா்களின் நிா்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதால் மேற்படி பகுதியில் 3 மின் விளக்கு அமைக்க மாமன்றம் பாா்வைக்கும் முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி பாளை மண்டலம் 37-வது வாா்டுக்குட்பட்ட குமரன் காலனியில் தெருவிளக்கு இல்லாததினால் பொதுமக்களின் கோரிக்கையின்படியும், பொது மக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் தெருவிளக்குகள் லைன் அமைத்து 20W LED 3 எண்ணம் அமைத்திட மின்வாரிய பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவு ரூ.40,000/- (ரூபாய். நாற்பதாயிரம் மட்டும்)-க்கு நிா்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதல் மேற்படி பணியினை செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ1/2974/2022 (பா.வாா்டு)

**தீா்மானம் எண்: 188 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---